<u>தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தென்காசி.</u>

முன்னிலை : திருமதி.J.கிறிஸ்டல் பபிதா, எம்.எஸ்.சி., எம்.எல்.,
தலைமை நீதித்துறை நடுவர், தென்காசி.

2026 ம் ஆண்டு ஜுலை திங்கள் 03 ஆம் நாள் வெள்ளிக் கிழமை

ஆண்டுப்பட்டிகை வழக்கு எண். 285/ 2018

C.N.R.No.TNTS02-000442-2018

அரசுக்காக :-
காவல் ஆய்வாளர்,
கடையநல்லூர் காவல் நிலையம்,
கு.எண் : 342/ 2017 . . . குற்றமுறையிடுபவர்

/ எதிராக /

1) ஆறுமுகம்,
த.பெ. இசக்கி (எ) புகாரி
வேதகோவில் தெற்கு தெரு,
மேலகடையநல்லூர்.
2) சுரேஷ்,
த.பெ. இசக்கி (எ) புகாரி
வேதகோவில் தெற்கு தெரு,
மேலகடையநல்லூர்.
3) ஆறுமுகம்,
த.பெ. வேலு,
வேதகோவில் தெற்கு தெரு,
மேலகடையநல்லூர்.

. . . எதிரிகள்

இந்த வழக்கானது 11.06.2018 அன்று தென்காசி, நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.285/2018 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு, பின்னர் தென்காசி, தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்

அவர்களின் உத்தரவுப்படி இந்நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டு, 25.02.2026 அன்று இந்நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, இதுநாள் வரையில் பரிசீலனையில் இருந்து வந்த இவ்வழக்கு 18.06.2026 அன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது அரசுத்தரப்பில் அரசு கூடுதல் வழக்கறிஞர் திரு.R. சுரேஷ் அவர்கள் ஆஜராகியும், எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. T. துாதர்சிங் அவர்களும் ஆஜராகியும், வழக்கில் முன்னிடப்பட்ட சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் ஆகியவற்றை பரிசீலனை செய்தும் இதுநாள் வரை இந்நீதிமன்ற ஆய்விலிருந்து இன்று (03.07.2026) இந்நீதிமன்றம் வழங்கும்..

<u>**தீர்ப்புரை**</u>

1. <u>**அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் :–**</u>

கடந்த 11.09.2017 ம் தேதி 21.00 மணிக்கு மேலக்கடையநல்லூர் மலம்பாட்டை ரோட்டிலுள்ள முருகேசன் சிக்கன் கடையில் புகார்தாரர் சிக்கன் வாங்க சென்ற போது கூட்டம் அதிகமாக இருந்ததால் முருகேசனிடம் "சீக்கிரம் சிக்கன் கொடுங்கள்" என்று கேட்டதாகவும் அப்போது அங்கு சிக்கன் கடையில் உள்ளே பிராந்தி குடித்து கொண்டிருந்த எதிரிகள் புகார்தாரரை பார்த்து "உனக்கு என்னடா அவ்வளவு அவசரம் தேவிடியா மவனே" என்று அசிங்கமாக பேசவும் புகார்தாரர் "ஏன் இப்படி பேசிறிங்க" என்று கேட்டதற்கு எதிரிகள் கீழே கிடந்த கல்லை எடுத்து கன்னத்திலும் தலையிலும் எறிந்து சாதாரண காயம் உண்டுபண்ணியதாகவும், எனவே எதிரிகள் இதச பிரிவுகள் 294(பி), 324–ன் படி குற்றங்கள் புரிந்துள்ளதாக கடையநல்லூர் காவல் நிலைய காவல் ஆய்வாளர் அவர்கள் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. அழைப்பாணையின்பேரில் ஆஜரான எதிரிகளுக்கு வழக்காவணங்களின் நகல்கள் யாவும் கு.விமு.ச.207 பிரிவின் படி இலவசமாக வழங்கப்பட்டது.

3. இரு தரப்பு வாதுரைகளையும் ஆவணங்களையும் பரிசீலனை செய்து எதிரிகள் குற்ற இறுதி அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கும் குற்றங்கள்

புரிந்திருக்கக்கூடும் என்று கருதுவதற்கு போதுமான ஆதாரங்கள் வழக்கில் இருந்தமையால் எதிரிகள் மீது இதச பிரிவுகள் 294(பி), 324– ன் படி, குற்றச்சாட்டுகள் வனையப்பட்டு குற்றச்சாட்டுகள் பற்றி எதிரிகளிடம் விளக்கிக்கூறி வினவியபோது எதிரிகள் குற்றச்சாட்டுகளை மறுத்தனர். எதிரிகள் குற்றச்சாட்டுகளை மறுத்த காரணத்தால் அரசுத்தரப்பு சாட்சிகளின் விசாரணைக்காக வழக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

4. இந்த வழக்கில் எதிரிகளுக்கு எதிரான குற்றங்களை நிரூபிக்கும் பொருட்டு அரசுத்தரப்பில் அ.சா–1 முதல் அசா–3 வரையான சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளனர். அரசுத்தரப்பு அசாஆ–1 மற்றும் அசாஆ–2 சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிரிதரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

5. <u>இவ்வழக்கில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை யாதெனில்,</u>

அரசுத்தரப்பில் எதிரிகள் மீது சுமத்தப்பட்டுள்ள இதச பிரிவுகள் 294(பி), 324 –ன் படியான குற்றச்சாட்டுகளும் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? இல்லையா? என்பதாகும்.

6. **<u>தீர்வு:–</u>**

இரு தரப்பு வாதமும் கேட்கப்பட்டு வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. அரசுத்தரப்பில், எதிரிகள் புகார்தாரரை பார்த்து "உனக்கு என்னடா அவ்வளவு அவசரம் தேவிடியா மவனே" என்று அசிங்கமாக பேசியதாகவும் புகார்தாரர் "ஏன் இப்படி பேசிறிங்க" என்று கேட்டதற்கு எதிரிகள் கீழே கிடந்த கல்லை எடுத்து கன்னத்திலும் தலையிலும் எறிந்து சாதாரண காயம் உண்டுபண்ணியதாக கூறப்பட்டு எதிரிகள் மீது இதச பிரிவுகள் 294(பி), 324 –ன் படி குற்றச்சாட்டுகள் வனையப்பட்டுள்ளது.

7. இவ்வழக்கின் புகார்தாரரான சாட்சி –1 சண்முகசுந்தரம் என்பவருக்கு பல அழைப்பாணைகள் அனுப்பப்பட்டும் அவர் ஆஜராகவில்லை. எனவே அவர் அரசுத்தரப்பில் சாட்சியாக விசாரிக்கப்படவில்லை.

8. கண்ணுற்ற சாட்சியான அசா-1 மாரியம்மாள் என்பவர் தன்னுடைய சாட்சியத்தில், "எதிரிகளை எனக்கு தெரியாது. சாட்சி சண்முகசுந்தரம் என்னுடைய தம்பி. இந்த சம்பவத்தை நான் நேரில் பார்க்கவில்லை. இந்த வழக்கு சம்பவம் குறித்து எனக்கு எதுவும் தெரியாது" என்று கூறியுள்ளார். அசா-2 கிருஷ்ணவேணி என்பவர் தன்னுடைய சாட்சியத்தில் "சாட்சி சண்முகசுந்தரம் எனது கணவர். அவர் தற்போது வெளிநாட்டில் வேலை பார்த்து வருகிறார். எதிரிகளுடன் என்னுடைய கணவர் சமாதானமாக போய்விட்டார். இந்த வழக்கு சம்பவம் குறித்து எனக்கு எதுவும் தெரியாது" என்று கூறியுள்ளார். அசா-1 அசா-2 ஆகியோர்கள் அரசுத்தரப்பு வழக்கை ஒத்து சாட்சியம் அளிக்கவில்லை.

9. இவ்வழக்கின் புகார்தாரரான சாட்சி -1 சண்முகசுந்தரம் என்பவர் நீதிமன்றத்தில் ஆஜராகததால் அவர் அரசுத்தரப்பில் சாட்சியாக விசாரிக்கப்படவில்லை. முக்கிய சாட்சிகளான அசா-1, அசா-2 ஆகியோர்கள் அரசுத்தரப்பு வழக்கை ஒத்து சாட்சியம் அளிக்கவில்லை. இந்த வழக்கு 2018 ம் ஆண்டிலிருந்து நிலுவையில் இருந்து வருகிறது. இந்நிலையில் இதர சாட்சிகளை விசாரிப்பதால் எந்த பயனும் ஏற்படாது என்று கருதி அரசுத்தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டுள்ளது. எதிரிகளை இந்த வழக்கோடு இணைக்கும் வகையில் எந்த சாட்சியங்களும் அரசுத்தரப்பில் இல்லை. எனவே எதிரிகள் மீதான குற்றச்சாட்டுகள் அரசுத்தரப்பில் நிரூபணம் செய்யப்படவில்லை எனவும் எனவே எதிரிகள் குற்றவாளிகள் அல்ல எனவும் இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

<u>முடிவு:</u>

10. முடிவாக, எதிரிகள் மீதான இதச பிரிவுகள் 294(பி), 324 – ன் படியான குற்றச்சாட்டுகள் அரசுத்தரப்பில் நிரூபிக்கப்படவில்லை என்றும், எனவே எதிரிகள் குற்றவாளிகள் அல்ல என்றும் முடிவு செய்து, எதிரிகளை இதச பிரிவுகள் 294(பி), 324 – ன் படியான குற்றங்களிலிருந்தும் குற்றவியல் விசாரணை முறைச் சட்டம் பிரிவு 248(1)-ன் கீழ் விடுதலை செய்து

தீர்ப்பளிக்கப்படுகிறது. இவ்வழக்கில் எதிரிகள் விசாரணை காலத்தில் பிணையில் இருந்து வந்துள்ள நிலையில், மேல் முறையீட்டு காலத்திற்கு பின் எதிரிகளின் பிணை பத்திரம் ரத்து செய்திட உத்தரவிடப்படுகிறது.

11. இவ்வழக்கில் சான்று பொருள் எதுவும் தாக்கல் இல்லை.

இந்த தீர்ப்பானது என்னால் சுருக்கெழுத்தருக்குச் சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் என்னால் சரிபார்க்கப்பட்டு 2026ம் ஆண்டு ஜுலை திங்கள் 03 ம் நாள் திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

J CHRISTAL BABITHA
Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.07.04 14:10:42 +0530

தலைமை நீதித்துறை நடுவர்,
தென்காசி.

<u>அரசு தரப்பு சாட்சிகள் </u>: –

| அரசுத்தரப்பு சாட்சி எண் | சாட்சியின் பெயர் | விளக்கம் |
|---|---|---|
| 1 | திருமதி. மாரியம்மாள் | கண்ணுற்ற சாட்சி |
| 2 | திருமதி. கிருஷ்ணவேணி | கண்ணுற்ற சாட்சி |
| 3 | திரு. கோபால்<br>(உதவி ஆய்வாளர்) | வழக்கு பதிவு செய்த சாட்சி |

<u>அரசு தரப்பு சான்றாவணங்கள்</u> :–

| அரசுத்தரப்பு சான்றாவணம் எண் | சான்றாவணத்தின் விளக்கம் | நிரூபித்தவர் / சான்றளித்தவர் |
|---|---|---|
| 1. | புகார் வாக்குமூலம் | அ.சா.3 |
| 2 | முதல் தகவல் அறிக்கை | அ.சா.3 |

<u>அரசு தரப்பு சான்று பொருட்கள்:–</u> இல்லை

<u>எதிரிகள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u> : – இல்லை

<u>எதிரிகள் தரப்பு சான்று பொருள்கள்</u>: – இல்லை.

J CHRISTAL BABITHA
Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.07.04 14:10:50 +0530

தலைமை நீதித்துறை நடுவர்,
தென்காசி.

பின் குறிப்பு:–

- ✓ எதிரிகள் விசாரணை காலத்தில் பிணையில் இருந்து வந்தனர்.
- ✓ சாட்சிகள் மூன்று நாட்களுக்கு மேல்விசாரிக்கப்படாமல் நிறுத்தி வைக்கப்படவில்லை.
- ✓ காவல் துறைக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.

,